பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

12 12 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக பொதுத்துறை வங்கிகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
2. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க வேண்டுமென மத்திய அரசு, இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.
3. கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில மின் துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.
4. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது
5. ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசின் சீரிய நடவடிக்கைகள் காரணமாக பொதுத்துறை வங்கிகள் குறிப்பிடத்தக்க வளர்சசியை எட்டியுள்ளதாக மத்தி.ய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

பொதுத்துறை வங்கிகள் மோசடி செய்பவர்களுக்கு வரம்பற்ற கடன்களை வழங்கி வருவதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கு சமூக வலைதளத்தில் பதிலளித்துள்ள அவர், இது அடிப்படை ஆதாரமற்றது என்று கூறியுள்ளார்.

ஐக்கிய முற்போக்கு ஆட்சியின்போது பொதுத்துறை வங்கிகள் மோசமான நிலையில் இருந்ததாகவும், தவறான நபர்களுக்கு தாராளமாக கடன்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பொதுத்துறை வங்கிகளின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டு, அதன் வளர்ச்சியில் சரிவு ஏற்பட்டதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு எடுத்த நடவடிக்கையால் 54 கோடிக்கும் அதிகமான புதிய கணக்குள் தொடங்கப்பட்டு 52 கோடிக்கும் கூடுதலான பிணையமில்லா கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன்களில் பயனடைந்வதவர்களில் 68 சதவீதம் பேர் பெண்கள் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க வேண்டுமென மத்திய அரச, இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இலங்கைக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா அந்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் திரு ராமலிங்கம் சந்திரசேகர், இணை அமைச்சர் திரு ரத்ன கமகே ஆகியோரை சந்தித்து மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக பேச்சு நடத்தினார்.

இந்த பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு சந்தோஷ் ஜா அப்போது வலியுறுத்தினார்.,

**[]<<<>>>[]**

திருவள்ளூர் மாவட்டம் குத்தப்பாக்கம் புறநகர் பேருந்து முனைய கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைவரும், அமைச்சருமான திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

நேற்று இந்த பேருந்து முனைய கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த பின் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பேருந்து முனையத்துக்கு வரும்

பேருந்துகள் சீராக வந்து செல்ல உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பேருந்து முனையத்தில் காவல்நிலையம் அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கோவை மாநகராட்சியில் சாலை பணிகளுக்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக மாநில மின் துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காந்திபுரம் பேருந்து நிலையத்தை புதுப்பிக்க 30 கோடிரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சக்தி சாலையை அகலப்படுத்துவதற்காக 54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், கூடுதல் நிதி தேவைப்பட்டாலும் மாநில அரசு அதற்கான நிதியை ஒதுக்கும் என்றும் அவர் கூறினார்.

மழை மற்றும் வெள்ளத்தால் விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டபோதிலும், மாநில அரசின் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பணியாற்றியதால் இரண்டே நாட்களில் இயல்பு நிலை திரும்பியதாகவும் திரு செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

[]<<<>>>[]

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை சீரமைக்க தேவையான நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ளும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அந்த ஆலையை நேற்று ஆய்வு செய்த அவர், ஆலைக்கு கரும்பு வழங்கும் காஞ்சிபுரம், திருவள்ளூர்,. ராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சர்க்கரை சத்து அதிகமாக உள்ள கரும்பை பயிரிடுவதால் விவசாயிகளுக்கும் வருவாய் கிடைப்பதோடு, சர்க்கரையை ஆலையை லாபகரமாக நடத்தவும் முடியும் என்று கூறினார்.

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியில் விளையும் அனைத்து கரும்பையும் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கே எடுத்துவர நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கரும்பு வெட்டுக்கூலி மற்றும் மானியம் குறித்து விவசாயிகளின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்றும், அடுத்த ஆண்டு முதல் கரும்பு அரவை அக்டோபர் மாதத்திலே தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ராஜேந்திரன் கூறினார்,

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை. திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட 23 மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடாப் பகுதியில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளதால் மறு உத்தரவு வரும் வரை மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் பாம்பன், மண்டபம் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் ஆயிரத்து 500 விசைப்படகுகள், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் கரையோரப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.,

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முதல் விட்டு விட்டு மிதமானது முதல் கனமழை பெய்து வருகிறது.

சென்னையிலும் நேற்று முதல் மழைபெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய 12 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நாகை மாவட்டத்தில் உலக புகழ்பெற்ற நாகூர் ஆண்டவர் தர்க்காவின் 468-ஆம் ஆண்டு கந்தூரி விழாவின் முக்கியநிகழ்ச்சியான சந்தனக்கூடு ஊர்வலம் இன்று அதிகாலை விமரிசையாக நடைபெற்றது.

இந்த சந்தனக்கூடு ஊர்வலத்தில் மழையை பொருட்படுத்தாது ஏராளமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) -39----- செகண்ட்*

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி திருவண்ணாமலைக்கு முன்பதிவில்லா சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே ஏற்பாடு செய்துள்ளது.

நாளை முதல் மூன்று நாட்களுக்கு சென்னை தாம்பரம், விழுப்புரம், காட்பாடி ஆகிய ரயில் நிலையங்களிலிருந்து இந்த சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

ஆப்கான் தலைநகர் காபூலில் நேற்று நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் அமைச்சர் திரு கலில் உர் ரஹ்மான் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட் கூட்டு ஆணையக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஷேக் அப்துல்லா பின் சையத் புதுதில்லி வந்துள்ளார்.

[]<<<>>>[]

வரும் புத்தாண்டிலிருந்து இந்தியர்களுக்கு மின்னணு முறையில் விசா வழங்கும் நடைமுறை அமல்படுத்தப்படும் என்று தாய்லாந்து அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக்குழு புதுதில்லியில் நேற்று ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 26 நாடுகளின் தூதர்களுடன் கலந்துரையாடியது.

[]<<<>>>[]

இமாச்சல பிரதேசத்தில் முதலமைச்சர் திரு சுக்விந்தர் சிங் சாகு தலைமையிலான அரசு பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுபெற்றதை அடுத்து இயற்கை வேளாண்மை உள்ளிட்ட ஆறு புதிய திட்டங்களை அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டத்தில் பருவமழை முன்னேற்பாட்டு பணிகள் குறித்து அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அதிகாரி திரு பிரகாஷ் நேற்று மாவட்ட ஆட்சியர் மற்றும் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெறுகிறது.

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டத்தில் அரும்பாவூர் பெரிய ஏரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப் பணிகளை ஆட்சியர் கிரேஸ் பச்சவ் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் கொத்தப்புள்ளி ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 69 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி பூங்கொடி வழங்கினார்.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பகுதியில் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மூன்று கிராமங்களுக்கு வனத்துறையின் அனுமதி பெற்று தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதாக ஆடசியர் திரு ராஜகோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ராமநாதபுரம் மாவட்டம் திருஉத்திரகோசமங்கையில் உள்ள அருள்மிகு ஸ்ரீமங்களநாதசுவாமி திருக்கோவில் ஆரத்ரா தரிசன விழாவையொட்டி அடுத்த மாதம் 13-ஆம் தேதி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலக குழு ஸ்குவஷ் சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறும் காலிறுதி ஆட்ட்தில் இந்திய ஆடவர் அணி – பிரான்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

ஹாங்காங்கில் இந்திய நேரப்படி நண்பகல் 12 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

மகளிர் பிரிவில் இன்று பிற்பகல் நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா – அமெரிக்க அணியை எதிர்கொள்கிறது.